**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**M.C.O.P.No.58/2023**

**வழக்கு சாட்சி P.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகுடீஸ்வரன் | தொழில் | : மாவட்ட கல்வி அலுவலகத்தில் உதவியாளர் |
| தகப்பனார் பெயர் | : சுப்பிரமணி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : வேலம்பட்டி | வயது | : சுமார் 48 |
| தாலுக்கா | : பழனி | நாள் | : 24.09.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :</u>

நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் ? சரிதான். முதல் தகவல்அறிக்கை பதிவு செய்ய புகார் யார் கொடுத்தார்கள் என்றால் ? எனது மனைவி தான் புகார் கொடுத்தார். அந்த புகார் 2 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தார்கள் என்றால் ? சரிதான். அதன்பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எனது கணவர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பள்ளிக்கு வேலைக்கு சென்று கொண்டு இருந்தார் மாலை 06.15 மணியளவில் எனது கணவர்போனில் இருந்து எனது போனுக்கு யாரோ ஒருவர்பேசி எங்கள் பைக்கின் எண்ணை சொல்லி வாகரை ரேணுகாதேவி பள்ளிக்கு சற்று மேற்கே நடுரோட்டில் காயங்களுடன் கிடந்தவரை ஆம்னி வண்டியில் பழனி அரசு மருத்துவமனைக்கு சேர்த்துள்ளதாக தகவல் சொன்னார் என்றால் ? சரிதான். பழனி மருத்துவமனையில் முதல் உதவி செய்ததற்கான விபத்து பதிவேட்டு நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். முதல் தகவல் அறிக்கையில் பதிவு எண் தெரியாத, JCB வண்டியை ஓட்டி வந்த பெயர், முகவரி தெரியாத நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். அந்த

புகார் 2 நாட்கள் கழித்து தான் கொடுக்கப்பட்டது என்றால் ? சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ? மருத்துவமனையில் இருந்த போது விபத்து ஏற்பட்டு நான்கு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். போலீசார் விசாரித்த போது எந்த வாகனம் என் மீது மோதியது என்றும், வாகனத்தில் பதிவு எண் சொல்லவில்லை என்றால் ? ஆமாம் நான் சொல்லவில்லை. JCB வாகனம் என்று மட்டும் தெரியும். எனது வாகனத்தையும், JCB வாகனத்தையும் 22.07.2020ம் தேதி தான் மோட்டார் வாகன ஆய்வாளரின் தனிக்கைக்கு உட்படுத்தப்பட்டது என்றால் ? ஆமாம். 22.07.2020ம் தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் JCB வாகனத்திற்கு எந்தவித சேதாரமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். நான் எந்த திசையில் இருந்து, எந்த திசை நோக்கி சென்றுகொண்டிருந்தேன் என்றாலும், JCB வாகனம் எந்த திசையில் இருந்து எங்கிருந்து வந்தது என்றால் ? பொருளூரில் இருந்து தொப்பம்பட்டி நோக்கி செல்லக்கூடிய சாலையில் நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது புறம் சென்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அதே திசையில் ரோட்டின் இடதுபுறத்தில் JCB நின்று கொண்டு வேலை செய்து கொண்டு இருந்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் ரோட்டின் மையப்பகுதியில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். விபத்து ஏற்பட்டவுடன் அந்த இடத்தில் தூக்கி வீசப்பட்டுவிட்டது. அதனால் சம்பவ இடத்தை அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் நான் ஓட்டி வந்த வாகனத்திற்கு பிரேக் போட்டதால் டயர் மார்க் ஏதாவது உள்ளதா என்றால் ? இல்லை. புகார் மனுவில் JCB வாகனத்தின் பதிவு எண் எனது மனைவி குறிப்பிடாத நிலையில் நானும் JCB வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிடாத நிலையில் JCB வாகனத்தில் பதிவு எண் காவல் துறையினருக்கு யார் சொன்னார்கள் என்பது பற்றி ஏதாவது தெரியுமா என்றால் ? யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. காவல் துறையினரின் விசாரணையின் வழியாக பதிவு எண்ணை

போட்டுள்ளார்கள். இந்த விபத்தை பார்த்ததாக கண்ணுற்ற சாட்சி யாரும் எனக்கு தெரியாது என்றால் ? விவேகானந்தன் என்பவர் பொருளுரை சார்ந்தவர். சம்பவத்தை பார்த்தவர் ஆவார். அவர் எங்கு வேலை பார்க்கிறார் என்றால் ? பொருளூர் பேக்கரி வைத்துள்ளார். இவ்வழக்கில் எத்தனை மாதங்கள் கழித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால்? கோவிட் காலம் என்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான JCB TN 50 Y 4848 என்ற வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றும், பின்னிட்டு 1வது எதிர்மனுதாரர் மற்றும் காவல் துறையினரின் உதவியுடன் மேற்படி வாகனத்தை வழக்கிற்கு உட்படுத்தி தவறான முறையில் இழப்பீடு பெறும் நோக்கத்தோடு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. JCB வாகனமானது உண்மையிலேயே விபத்து ஏற்படுத்தியிருக்குமானால் அதன் உரிமையாளர் காப்பீடு நிறுவனத்தில் தகவல் கொடுத்திருப்பார் என்றாலும், மேற்படி வாகனம் விபத்தில் ஈடுபடாத காரணத்தினால் தான் எந்தவித தகவலும் 1–வது எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திற்கு சொல்லவில்லை என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.13 ஆவணமான மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு இடதுபுறம் எந்தவொரு சேதாரமும் ஏற்படவில்லை என்றாலும், வலதுபுறம் சேதாரம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ? சரியல்ல. எனது இருசக்கர வாகனத்தின் பெட்ரோல் டேங்கில் அடிப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் ? சரிதான். 1வது எதிர்மனுதாரர் பெயரில் உள்ள JCB எண். TN 50 T 4848 என்ற வாகனமானது விபத்தில் ஈடுபடாத காரணத்தினால் எந்தவித இழப்பீடும் இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்க வேண்டியதில்லை என்றால் ? சரியல்ல. நான் 18.03.2020ம் தேதியில் இருந்து 28.03.2020ம் தேதி வரை கோவை ராயல் கேர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் ? சரிதான். அதன்பிறகு

நான்கு முறை வெளிநோயாளியாக சிகிச்சைக்கு சென்று வந்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். 01.11.2020ம் தேதிக்கு பிறகு தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக 2020ம் ஆண்டே குணமடைந்துவிட்டது என்றாலும், எந்தவிதமான இயலாமை குறைபாடும் இல்லை என்றும் சொன்னால் ? சரியல்ல. நான் விபத்து சமயம் அரசு உயர்நிலைப் பள்ளி பொருளூரில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும் தற்சமயம் பதிவி உயர்வுபெற்று ஒட்டன்சத்திரம் மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் ? சரிதான். எனது சம்பளம் அனைத்தும் வங்கி பணப்பரிவர்த்தனை என்றால் ? சரிதான். விபத்து சமயத்தில் எவ்வளவு சம்பளம் பெற்று வந்தேன் என்றாலும், தற்போது எவ்வளவு சம்பளம் பெற்று வருகிறேன் என்றாலும் ? விபத்து சமயத்தில் 30,000 பெற்று வந்தேன். தற்போது எவ்வளவு சம்பளம் வாங்குகிறேன் என்று நினைவில் இல்லை. எனக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் இருந்து தற்போது அதிக சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 15.10.2020 தேதியிட்ட சி.டி.ஸ்கேன் அறிக்கையில் Impression என்ற இடத்தில் Moderate fatty liver with simple left lobe cysts. Bilateral chronic renal parenchymal disease with non-obstructive renal claculi. Mild Splenomegaly. Mild right Pleural effusion என்று கண்டுள்ள நிலையில் விபத்தினால் எனக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றால்? சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எவ்வித ஊனக்குறைபாடும் இல்லை என்றால் ? சரியல்ல. 1வது எதிர்மனுதாரரின் வாகனம் வழக்கில் தவறாக உட்படுத்தியுள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 2-வது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.09.24 18:24:07 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்